## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

தரமான பாடநூல்களை அச்சிட்டு, குறைந்த விலையில், குறித்த காலத்தில் மாணவ மாணவியருக்கு வழங்குவதே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடநூல்கள் கிடைப்பதை உறுதிசெய்வதும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பள்ளிகளுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குவதும் பாடநூல் கழகத்தின் குறிக்கோள் ஆகும்.

### 8.1. பாடப்புத்தகங்கள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் 502 தலைப்புகளில் 529 பாடநூல்களை (தொகுதி-I மற்றும் II உட்பட) அச்சிடுகிறது. பாடநூல்கள் மற்றும் தொழிற்கல்விக்கான பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டய பயிற்சிக்கான வளநூல்கள், பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப் பட்டு வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

- மாநிலப் பாடத்திட்டத்தில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பாடநூல்கள்.
- மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தொழிற்கல்விப் பாடநூல்கள்
- மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்திய பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்பு பாடநூல்கள்
- 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விப் பாடநூல்கள்
- அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு பருவ பட்டயப் படிப்பிற்கான பாடநூல்கள்.
- சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப் பாடநூல்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாடநூல்கள்.
- ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள்
- ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்.
- பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான வினாவங்கி, மாதிரி வினாவங்கி மற்றும் தீர்வு நூல்கள்.

8.2. இலவசப் பாடநூல்கள்

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், சுயநிதிப் பள்ளிகளில் மாநில பாடத் திட்டத்தின்கீழ், தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்ப்பாடநூல்கள் மட்டும் 2007-2008 -ஆம் கல்வியாண்டு முதல் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

8.3. பிற துறைகளுக்கான இலவசப் பாடநூல்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் வனத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்கள் இக்கழக வட்டார அலுவலகங்களிலிருந்து அந்தந்தத் துறைகளுக்கு நேரிடையாக வழங்கப்படுகின்றன.

8.4. பிறமாநிலங்களில் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவசப் பாடநூல்கள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச் சங்கம், அகமதாபாத் மாநகராட்சி, அந்தமான் நிக்கோபார் நிர்வாகம் மற்றும் தமிழ் ஐக்கிய சங்கம், கொச்சின் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் பாடநூல்களை இலவசமாக வழங்கி வருகிறது.

8.5. குறிப்பேடுகள்

ஆதி திராவிடர் நலத்துறை, சமூக நலத்துறை, பிற்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கத் தேவைப்படும் குறிப்பேடுகளும், வெளிச்சந்தை விற்பனைக்காக குறிப்பேடுகளும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

8.6. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவச பாடநூல்

2008-09ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெருமழை / புயலால் பெருவாரியான மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 1-12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

8.7. வலைத்தளம்

இந்தியாவிலேயே 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்களை வலைத்தளத்தில் வெளியிடும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது உட்பட 6 மொழிகளில் 529 பாடநூல்களை வெளியிட்டு வருகிறது. "இணையதளத்தில் பாடநூல்கள்" என்ற திட்டத்தின் கீழ் 348 பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடநூல்கள்/ வளநூல்கள் மற்றும் 10ம் வகுப்பு மெட்ரிக்குலேசன் பள்ளி பாடநூல்கள், சேர்த்து மொத்தம் 21 பாடநூல்கள் 08-09-2008 அன்று வலைத்தளத்தில் www.textbooksonline.tn.nic.in வெளியிடப்பட்டது. மீதமுள்ள 160 பாடநூல்களையும் படிப்படியாக வலைத்தளத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.